# காலந்தோறும் பாலுணர்வு அரசியல்

*முனைவர் ச. கந்தன்*
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை
தூய சவேரியார் கல்லூரி, (தன்னாட்சி)
பாளையங்கோட்டை

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: ஜூலை

வருடம்: 2022

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v10iS1-Jul.5007

## முன்னுரை

தொல் பழங்காலத்தே மனித வாழ்க்கையில் தலைமை இடத்தைப் பெற்றிருந்த பெண், கற்பு என்னும் பெருங்குணத்தால் ஆண்களுக்கு அனைத்தையும் விடடுக் கொடுக்க ஆரம்பித்தாள். இறுதியில் தன் தலைமையிடத்தையும் விட்டுக்கொடுத்து, வீட்டுக் கடமைகளை மட்டும் நிர்வகிக்கத் தொடங்கினாள். இந்த வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்ட ஆணினம், மதத்தின் பெயரால் அவளை அடக்கியாளவும் முற்பட்டது. ஆண்களுக்குத் தேவையில்லாத கற்பு நெறி, பெண்களுக்கு மட்டும் கட்டாயமாக இருக்க வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டது. இத்தகைய நிலைகளை ஏற்றுக் கொண்டு பெண்கள் வாழ்ந்து வந்துள்ளமையைக் காலந்தோறும் இலக்கியங்கள் பின்பற்றி வந்துள்ளன, என்பதை விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

## பாலுணர்வு அரசியல் விளக்கம்

"நமது உடலின் தினசரித் தேவைகளைப் புர்த்தி செய்யவும் இன்பமளிக்கவும் வேசிகள் வேண்டும். சட்டரீதியான குழந்தைகளைப் பெற்றுத் தரவும் வீட்டைப் பார்த்துக் கொள்ளவும் மனைவிகள் வேண்டும்" *(சி.எஸ். முருகேசன், வரலாற்றில் தேவதாசிகள், ப.8)* என்கிறார் டோமஸ்த்னீஸ்

அன்று முதல் இன்று வரை உலகமானது, ஆண்களுக்கான உலகமாக, பெண்களின் உடலை வைத்தே பெண்களை அடிமைப்படுத்தும் உலகமாக ஒவ்வொரு இடமும் மாறிப் போலிருக்கிறது என்பதை உணர முடிகிறது. மேலும் ஆண்கள் விதித்திருக்கும் கோட்பாடுகளைப் பெண்கள் மீறினால் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் என்ற நிலையும் தொன்றுதொட்டு வருகின்றதை அறியலாம்.

## தொல்காப்பியத்தில் பாலுணர்வு அரசியல்

தமிழ் இலக்கியத்தின் தொன்மையான நூல்களில் ஒன்றான தொல்காப்பியம் ஆண்களின் நிலை குறித்து,

**"பெருமையும் உரனும் ஆடுஉமேன"**
**(தொல்காப்பியம் பொருள், களவு, நூ.எ. 7)**

என்று பெருமையும், உரனும் ஆணுக்குரிய பண்புகளாகவும்,

**"அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்தல்**
**நிச்சமும் பெண்பாற் குரிய"**
**(தொல்காப்பியம் பொருள், களவு, நூ.எ. 8)**

என்று பெண்ணுக்குரிய பண்புகளாகவும் வெளிப்படுத்துகிறது.

பெண்ணியலார் ஆண் தன் மேலாண்மையை நிலைநாட்ட அவனுக்கு பெரிதும் பயன்பட்டது மொழிதான் என்பர். தொல்காப்பியத்தில் ஆண்-பெண் உறவு முறையை வடிவமைக்க முயல்கிற தொல்காப்பியர், மொழியின் இந்த ஆற்றலைப்புரிந்து கொண்டு பெண்ணின் வாய்மொழியில் கை வைக்கிறார்.

**"ஐயக் கிளவி ஆடூஉ விற்குரித்தே"**
**(தொல்காப்பியம் பொருள், களவு, நூ.எ. 42)**

என்கிறார்.

இது போலவே கைக்கிளையிலும் சொல்லெதிர் பெறாமல் சொல்லிச் சொல்லி இன்புறுவதற்கும் அணுக்கு மட்டுமே இடமிருக்கிறது. மேலும் காதலனோடு ஏற்படுகிற உணர்ச்சிப் பெருக்கைக்கூட மொழிப்படுத்திப் பெண் பேசக் கூடாது எனத் தடை விதிக்கிறார்.

**"தன்னுறு வேட்கை கிழவன்முற் கிளத்தல்**
**எண்ணுங்காலைக் கிழத்திற்கு இல்லை"**
**(தொல்காப்பியம் பொருள், களவு, நூ.எ. 26)**

பெண் எவ்வாறு தன் வேட்கையை வெளிப்படுத்துவது என்றால் புதுப்பானையில் பெய்த நீர் போல வெளிப்படுத்தலாம் என்கிறார்

ஆழமான சிந்தனை மரபுகளைக் கொண்டுள்ள தொல்காப்பியம், ஆண்களுக்கான பாலின நடத்தையில் சிறந்த தன்மைகளையும், பெண்களுக்குப் பாலின நடத்தையில் மிகுந்த கட்டுப்பாடுகளும் விதிக்கின்றது. இத்தகைய பாலின சமத்துவமின்மையைத் தொல்காப்பியத்தின் வழி அறியலாம்.

### சங்க காலத்தில் பாலுணர்வு அரசியல்

"சங்க காலத்தில் பாலுணர்வு அரசியலும், சமூக பொருளாதார அரசியலும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்திருந்தன. சங்க இலக்கிய அகத்திணையில் களவு ஒழுக்கம் பற்றிய திணைப் பாடல்களில் இந்தப் பிணைவினை அவதானிக்கலாம், பாலியல் அரசியல் உக்கிரத்தைக் கற்பு ஒழுக்கம் பற்றிய திணைப் பாடல்களில் அவதானிக்கலாம்" (ராஜ்கௌதமன், தமிழ் சமூகத்தில் அறமும் ஆற்றலும், ப.332)

என்கிறார் ராஜ்கௌதமன்.

அறநெறிச் சிந்தனை செழித்த சங்க இலக்கிய காலம் பெண்களுக்கு இடையே பாலியல் வேறுபாட்டைக் காட்டுகிறது. சங்க காலத்தில் பெண்களுக்கு இரண்டாம் இடம் வழக்கத்தில் வந்துவிட்ட காலம். பண்பு நலன்கள் கூடப் பால் வேறுபாட்டிற்கேற்ப பகுக்கப்பட்ட காலம்.

**"வினையே ஆடவர்க்கு உயிரே வாணுதல்**
**மனையுற மகளிர்க்கு ஆடவர் உயிரே"**
**(குறுந்தொகை, பா.எ. 135)**

எனும் சங்க இலக்கிய வரிகள் மூலம் பணிப் பங்கீட்டில் ஆடவர்க்குப் புறநிலைப் பொறுப்புகளும் உரியவை என்று வரையறுப்பதைக் காண முடிகிறது.

### அற இலக்கியங்களில் பாலுணர்வு அரசியல்

சமூகத்தில் மக்களிடையே நல்லொழுக்கம் குறையும் போது உருவானது தான் அற இலக்கியங்கள். அத்தகைய அற இலக்கியங்களில் ஆண்களுக்கு என்றும், பெண்களுக்கு என்றும் தனித்தனி அறங்கள் கூறப்பட்டுள்ளன.

**"தெய்வம் தொழாஅள் கொழுநற்**
**றொழுதெழுவாள்**
**பெய்யெனப் பெய்யும் மழை"**
**(திருக்குறள், கு.எ. 55)**

வேறு தெய்வம் தொழாதவளாயத் தன் கணவனையே தெய்வமாகக் கொண்டு தொழுது துயிலெழுகின்ற பெண் பெய் என்றால் மழை பெய்யும் என்று வள்ளுவர் கூறுகிறார்.

### காப்பியங்களில் பாலுணர்வு அரசியல்

காப்பியங்களில் அறவழி வாழ்க்கை நடத்துதல் இல்லறத்தைப் பேணிக் காத்தல், கணவனைத் தெய்வமாக வழிபடல் ஆகியவை பெண்களின் வாழ்க்கை நெறியாக வகுக்கப்பட்டுள்ளன. பெண் என்பவள் எந்நேரமும் தன் உடலை மறுத்து ஆணின் நினைவிலேயே வாழவேண்டும் என்ற போக்கு சிலம்பிலும் வெளி ப்படுகிறது.

கோவலன், மாந்தளிர் மேனி மாதவி மடந்தையுடன் விடுதலறியா விருப்பினனாக உடல் விளையாட்டில் மூழ்கிக்கிடந்தான். ஆனால், கண்ணகியோ பெண் எனும் நெருப்புடம்பு விரிக்கும் காமத் தீ நாக்கு களுக்குப் பலியாகிவிடாமல் சிலம்பின்றி, மேகலையின்றி, குங்குமமின்றி, கண்மையின்றி, திலகமின்றி, காதணியின்றி, கடவுள் வழிபாடு கூட இன்றி மனித இயற்கைப் பண்பான புன்னகைகூட இன்றி இருக்கிறாள் (அந்தமாலை செய் காதை 48-57) இவ்வாறு கண்ணகி மட்டுமல்ல, சிலம்பில் வரும் பெண் பாத்திரங்கள் அனைத்தும் ஆணை எதிர்நோக்கிய மன உலகத்தில் சஞ்சரித்துத் திரிகின்றன. இது போலவே பெண்டீர் வரலாறும் கட்டுரைக் காதையில் கூறப்படும் பரதன்- நீலி வரலாறும், வார்த் திகன் மனைவி வரலாறும் ஆணின் வக்கிர பாலியல் மேலாண்மையை நோக்கிக் கிடக்கும் பெண்மை நிலையைப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

### நவீன இலக்கியங்களில் பாலுணர்வு அரசியல்

இந்தியாவில் ஆங்கிலக் கல்வி வரவால் மேலை நாடுகளிலுள்ள சமத்துவம், சகோகரத்துவம், பொதுவுடைமை அறிமுகம் செய்யப்பட்டன. இவற்றின் மூலமாகப் பெண் சார்ந்த முன்னேற்றம் நிகழ்ந்தது. பெண்களின் பாலியல் உணர்வுகள், சமுதாயம் மொழிந்திருக்கும் தளத்தை மீறவில்லை. ஆண் எவ்வாறு வேண்டுமென்றாலும் வெளிப்படுத்தலாம் வரையறை இல்லை. ஆண் ஆதிக்கச் சமூகத்தில் பெண் தன் உணர்வுகளை வெளி ப்படுத்துதல் என்பது மறுக்கப்பட்டதாக உள்ளது.

தற்பொழுது நவீன இலக்கியங்களிலும் ஆண் மகனுக்கே அதிக முக்கியத்துவம் வழங்கப்படுகிறது. பெண் போகப் பொருளாகவே சித்திரிக்கப்படுகிறாள். பண்பாடு என்னும் பெயரில் வெளி ப்படையாகக் காட்டாமல் இலைமறைக் காயாகக் காட்டுகின்றது.

**"ஒவ்வொரு பெண்ணும் சிலம்பை**
**உடைத்து கொண்டுதான் இருக்கிறாள்**
**காலிலிந்தல்ல கண்ணிலிருந்து"**

***(முனைவர். கி.இலட்சுமி, பெண்ணிய சிந்தனைப் போக்குகள், ப 471)***

என்ற கவிஞர் மேத்தாவின் மொழிகளால் பெண்களின் இன்னல்களை அறியலாம்.

### நாட்டுப்புற இலக்கியங்களில் பாலுணர்வு அரசியல்

அனைத்துத் தட்டு மக்களாலும் பெரிதும் விரும்பப்படும் நாட்டுப்புறப் பாடல்கள் பெண்களின் சோக நிலைகளை எடுத்தியம்புகின்றன.

**"தாலிக்கு அரும்பெடுத்த**
**தட்டானும் கண் குருடோ..?**
**சேலைக்கு நூலெடுத்த**
**சேனியனும் கண் குருடோ..?**
**பஞ்சாங்கம் பார்த்துச் சொன்ன**
**பாப்பனும் கண் குருடோ?**

***(சி.எஸ். முருகேசன் வரலாற்றில் தேவதாசிகள், ப. 292)***

தன்னுடைய நிலைக்கு ஆண் காரணம் என்ற சூழலில் பாட்டுப் பாடுவதைக் காண்கிறோம். பொருத்தம் பார்த்தல் பெண் குழந்தை பிறப்பு, சோதிடம், குறி போன்றவற்றிற்கும், நாளொரு மேனி பொழுதொரு வண்ணமாகத் திணிக்கப்பட்டு அதைப் பெண்கள் தான் பின்பற்ற வேண்டும் என்ற நிலையும் இந்த நாட்டுப்புற பாடல்கள் வெளிக்கொணர்கின்றன.

**நவீனப் பெண் எழுதத்துக்களில் பாலுணர்வு அரசியல்**

பெண் எழுத்தாளர்கள் படைப்புகளான சிறுகதை, நாவல் கவிதைகள், மாறுபட்ட நவீன சிந்தனைகளை வெளிக்காட்டுவதாக உள்ளது. ஆண் சமூகத்தால் உருவாக்கப்பட்ட மரபுகளை உடைக்கும் வண்ணமாகவும், அழித்து எழுதும் பெண்களின் உரிமைகளை உணர்த்தும் குறியீடாகவும் காட்சிப்படுத்து கின்றன.

பெரும்பாலான தாம்பத்திய உறவுகள் பெண்ணின் விருப்பமில்லாமலேயே அரங்கேற்றம் நிகழ்கின்றது என்பதை இரா. பிரேமா,

**"விரகம் எரித்த தாம்பத்திய புகை**
**ஒருவழிப் பாதையில்**
**நுழைந்து நுழைந்து வெளி யேறி**
**இளைப்பாறுகிறது"**

***(இரா. பிரேமா, பெண் எழுத்துக்களில் அரசியல் ப.27)***

எனும் கவிதை வழி உணர்த்தியுள்ளார். ஆண்களுடன் வாழும் வாழ்க்கையை,

**"பாம்புகளுடன் வாழ்வது**
**சிரமமாக இருக்கிறது**
**இல்லாமல் வாழ்வதும்"**

***(இரா. பிரேமா, பெண் எழுத்துக்களில் அரசியல் ப.27)***

என்றும் சுட்டுகிறார். அதாவது ஆண்களுடன் வாழ்வது கடினம். இல்லாமல் வாழ்வதும் கடினம். மேற்கண்டதிலிருந்து ஆண்களை எதிர்க்கும் நிலைகள் காணப்பட்டாலும் மாற்றுவழி என்பது இல்லை. ஆண்களைச் சார்ந்து வாழ்க்கை உள்ளது என்று பழைய மரபை எடுத்தாள்வதாகச் சில இடங்களில் காண முடிகிறது.

**முடிவரை**

தொடக்கக் காலம் முதல் இன்றுவரை ஆண்களுக்கு முதல் உரிமையும், பெண்களுக்கு இரண்டாவது உரிமைகளையும் விளக்குவதாக உள்ளது. இதில் சங்க காலமும் விதிவிலக்கல்ல என்பதைச் சுட்டிக்காட்டுவதாகவும், சமூகத்தில் காணப்பட்ட இப்பாலுணர்வு அரசியல் அனைத்துத் தளங்களிலும் பின்பற்றப்பட்டு வந்துள்ளதை உணர்த்துவதாகவும் இக்கட்டுரை அமைந்துள்ளது.